

இராயபுரம் சட்டமன்ற தொகுதி 48,52 மற்றும் 53வது வார்டுகளுக்கு உட்பட்ட கைலாசம் தெரு, பார்த்தசாரதி தெரு, சஜா முனுசாமி தெரு, போஜராஜ நகர், போஜராஜ நகர் சுரங்கப்பாதை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆய்வு செய்து, தொடர் மழை காரணமாக சாலைகள் மற்றும் தெருக்களில் தேங்கியிருக்கும் மழைநீரை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொண்டார். இந்த ஆய்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ. பெ.சுரேஷ், இஸ்மாயில், வட்டச் செயலாளர்கள் பாலன், ரவி, பால லட்சுமணன், கொரியர் முருகன், உள்பட மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசு – தமிழ்நாட்டில்

# அனைத்து மாவட்டங்களிலும் 5 ஜி சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளதா?

### மக்களவையில் க.செல்வம் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச.4 -

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் நேற்று நமது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தகவல் தொடர்பு அமைச்சகத்திற்கு பின் வரும் கேள்விகளை எழுப்பினார்.

(அ) தமிழ்நாட்டில் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் (TSPs) 35,655 5G அடிப்படை டிரான்ஸ்ஸீவர் நிலையங்களை (BTS) நிறுவியுள்ளனர். தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் 5G சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளனரா? என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா?

(ஆ) திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிறுவப்பட்ட 5G BTSகளின் மாவட்ட வாரியான விவரங்கள் மற்றும் அந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 5G நெட்வொர்க்கின் கீழ் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை? (இ) மேற்படி மாவட்டங்களின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் 5G இணைப்பு மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் கூடுதல் நிதி அல்லது தொழில்நுட்ப உதவியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா? (ஈ) தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட 5G பயன்பாட்டு வழக்கு ஆய்வகங்கள் மற்றும் சோதனை படுக்கைகளின் விவரங்கள் என்ன?

(உ) காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் அல்லது அதற்கு அருகாமையில் உள்ள தொடக்கநிலை நிறுவனங்கள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்காக தொடக்க நிலை மற்றும் ஆராய்ச்சி வசதிகளை நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

இதற்கு ஒன்றிய அரசு, அளித்துள்ள பதில்கள் வருமாறு:-

அ) 31.10.2025 நிலவரப்படி தமிழ்நாட்டில் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் (TSP) 37,157 5G அடிப்படை டிரான்ஸ்ஸீவர் நிலையங்களை (BTSகள்) நிறுவியுள்ளனர். மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களால் 5G சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன.



(ஆ) தமிழ்நாடு மின்சார விநியோக நிறுவனங்கள் வழங்கிய தகவல்களின்படி, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் உட்படட தமிழ்நாட்டில் உள்ள 5G BTS களின் மாவட்ட வாரியான எண்ணிக்கை இணைப்பு1 இல் வைக்கப்பட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் முறையே 224 மற்றும் 231 கிராமங்களில் 5G BTSகள் நிறுவப்பட்டுள்ளன.

(இ) நாடு முழுவதும் 5G இணைப்பு மற்றும் டிஜிட்டல் தொடர்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த அரசாங்கம் பல தொழில்நுட்ப மற்றும் நிதி முயற்சிகளை எடுத்துள்ளது. இதில் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகள் அடங்கும். இந்த முயற்சிகளில், பின்வருவன அடங்கும்.

(I) 2022 ஆம் ஆண்டில் 5G மொபைல் சேவைகளுக்கான அலைக்கற்றை ஏலம். (II) சரிசெய்யப்பட்ட மொத்த வருவாய் (AGR), வங்கி உத்தரவாதங்கள் (BGs) மற்றும் வட்டி விகிதங்களை பகுத்தறிவுப்படுத்த நிதிசீர்திருத்தங்கள். (III) 2022 மற்றும் அதற்குப் பிறகு ஏலத்தில் வாங்கப்பட்ட அலைக்கற்றைக்கான அலைக்கற்றை பயன்பாட்டுக் கட்டணங்களை நீக்குதல்.

(IV) SACFA (ரேடியோ அதிர்வெண் ஒதுக்கீடுகளுக்கான நிலையான ஆலோசனைக் குழு) அனுமதிக்கான நடைமுறையை எளிமைப்படுத்துதல்.

(V) தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை நிறுவுவதற்கான அனுமதி மற்றும் ROW அனுமதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக கதிசக்தி சஞ்சார் போர்டல் மற்றும் ROW (வழி உரிமை) விதிகள் தொடங்கப்பட்டன. (VI) சிறிய செல்களை நிறுவுவதற்கும் தொலைத்தொடர்பு பாதையை நிறுவுவதற்கும் தெரு தளபாடங்களைப் பயன்படுத்துவதற்கான காலக்கெடு அனுமதி. (VII) மொபைல் சேவை கிடைக்காத கிராமங்களில் 4G மொபைல் சேவையை வழங்க 4G செறிவூட்டல் திட்டம்.

(இ) மற்றும் (ஈ) தொடக்க நிறுவனங்கள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்காக. ஐஐடி மெட்ராஸில் ஒரு 5G சோதனைப் படுக்கையும், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களில் 7 5G பயன்பாட்டு ஆய்வகங்களும் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஏழு நிறுவனங்கள் திருச்சிராப்பள்ளி தேசிய தொழில்நுட்ப நிறுவனம், வேலூர் தொழில்நுட்ப நிறுவனம், கிண்டி பொறியியல் கல்லூரி (சென்னை), சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் (சென்னை), மற்றும் SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (செங்கல்பட்டு மாவட்டம்) ஆகியவையாகும். சென்னை, வேலூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு அருகில் உள்ளன என்பதைக் குறிக்கிறது.

மக்களவையில் க.செல்வம் எழுப்பிய துணை கேள்விகள் வருமாறு:

(அ) அனைத்து மாவட்டங்களிலும் 5G தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ள நிலையில், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டின் கிராமப்புறங்களின் பெரிய பகுதிகள் இன்னும் பலவீனமானவை அல்லது இல்லாதவை என்று தெரிவிக்கின்றன. குறிப்பாக உத்திரமேரூர், வாலாஜாபாத் மற்றும் அச்சரப்பாக்கம், மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர் ஆகிய தொகுதிகளில் மாணவர்கள், சிறு வணிகங்கள் மற்றும் சேவை வழங்கல் பாதிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டின் இந்த வசதியற்ற கிராமப்புற கிளஸ்டர்களுக்கு அரசாங்கம் ஏதேனும் நடந்து கொண்டிருக்கும் அல்லது வரவிருக்கும் திட்டங்களின் கீழ் கூடுதல் 5G BTS நிறுவலுக்கு முன்னுரிமை அளிக்குமா, மேலும் மாவட்டங்களில் முழு கிராமப்புற கவரேஜை உறுதி செய்வதற்கான காலக்கெடுவை குறிப்பிடுமாறு மாண்புமிகு. அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்?

(ஆ) தமிழ்நாட்டில் 5G பயன்பாட்டு வழக்கு ஆய்வகங்கள் மற்றும் சோதனை படுக்கைகள் நிறுவப்படுவதை அமைச்சகம் எடுத்துரைத்துள்ளது. ஆனால் இந்த வசதிகள் எதுவும் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டில் அல்லது அதற்கு அருகில் இல்லை. இருப்பினும் அது ஒரு பெரிய கல்வி மற்றும் மின்னணு உற்பத்தி மையமாக உள்ளது.

தொடக்க நிறுவனங்கள், திறன் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்காக காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து 5G கண்டுபிடிப்பு ஆராய்ச்சி சோதனைப் படுக்கை அல்லது பயன்பாட்டு வழக்கு ஆய்வகத்தை அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா? அப்படியானால், அத்தகைய திட்டத்தை எப்போது மேற்கொள்ள முடியும்?

இவ்வாறு க.செல்வம் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

## ஒன்றிய அரசு விளக்க வேண்டும்!

# ஒரே நாடு - ஒரே தேர்தல் - ரேஷன் கார்டு - தற்போதைய நிலை என்ன?

### மக்களவையில் கள்ளக்குறிச்சி தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 4-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்

அக்கேள்வியில், ஒரு நாடு ஒரு ரேஷன் கார்டு (ONORC) திட்டத்தின் தற்போதைய நிலை, இது முழுமையாக செயல்படுத்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் ONORC



அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட மாநிலங்கள் முழுவதும் பொது விநியோக முறை (PDS) நன்மைகளை அணுகக்கூடிய மொத்த ரேஷன் கார்டு பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் நாடு வாரியாக ONORCஐ செயல்படுத்துவதில் ஏதேனும் தொழில்நுட்ப, நிர்வாக அல்லது தளவாட சவால்களை ஒன்றிய அரசு அடையாளம் கண்டுள்ளதா என்றும் தமிழ்நாடு உட்பட புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு ரேஷன் சலுகைகளை தடையின்றி எடுத்துச் செல்வதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த 65 நடவடிக்கைகள் என்ன? என்றும் தகுதியுள்ள எந்தவொரு பயனாளியும் விலக்கப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்காக, ONORC திட்டத்தை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் வலுப்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்னும் தே.மலையரசன் கேள்வி எழுப்பினர்.

# திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் மழை வெள்ள பாதிப்புகள்!

### ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. பார்வையிட்டு நடவடிக்கை!

சென்னை, டிச. 4-

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண்:72 எம்.எஸ்.முத்து நகர்,மசூதி தெரு,காவாங்கரை, வாசுகி நகர்,வெங்கடேசபுரம் நியூகாலனி, பகுதியினை ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. நேற்று முன்தினம் (2/12/2025) மாலை பார்வையிட்டார்.

மாமன்ற உறுப்பினர் எம்.சரவணன், வட்டச்செயலாளர் எம்.ஏ.டீக்கா, பகுதி துணைச்செயலாளர் புவனவதி, வட்ட துணைச் செயலாளர் சிவகுமார், சுமதி, வயலா, ராஜலட்சுமி, பவித்ரா, அமீனா, மாதவன்,ரமேஷ்,ரமேஷ் பாபு, ஆதித்தியா, S. சுரேஷ்,ராஜசேகர்,நந்தா, உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திரு.வி.க.நகர் தொகுதி வார்டு எண்:72,கன்னிகாபுரம் - பிரைட்டைன்ஸ் ரோடு பகுதியினை (2/12/2025) மாலை பார்வையிட்டார்.

திரு.வி.க.நகர் தொகுதி வார்டு எண்:71 கணேசபுரம் மேம்பால பணிகள் நடைபெற்று வரும் பகுதியில் மழைநீரை வெளியேற்றுவது தொடர்பான பணியினை (2/12/2025) இரவு பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளிடம் கேட்டுக்கொன்டார்.

அதனைத்தொடர்ந்து திரு.வி.க.நகர் தொகுதி ஸ்டாரன்ஸ் ரோடு மாநகராட்சி பள்ளியில் பொதுமக்களுக்கு உணவு வழங்குவதற்காக செயல்பட்டு வருகின்ற உணவுக்கூடத்தில் மாநகராட்சி அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார்.

திரு.வி.க.நகர் தொகுதி ஸ்டாரன்ஸ் ரோடு மாநகராட்சி பள்ளியில் தாழ்வான பகுதிகளில் வசித்து



வருகின்ற பொதுமக்களுக்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சியால் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை மாநகராட்சி அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார்.

திரு.வி.க.நகர் தொகுதி ஸ்டாரன்ஸ் ரோடு மாநகராட்சி பள்ளியில் தாழ்வான பகுதிகளில் வசித்து வருகின்ற பொதுமக்களுக்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சியால் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை மாநகராட்சி அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார்.

திரு.வி.க.நகர் தொகுதி வார்டு எண்:75 எஸ்.எஸ்.புரம் “பி”-பிளாக் பகுதியில் தேங்கியிருக்கும் மழைநீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அதிகாரிகளுடன் சென்றோம். இந்த பணியில் மாவட்ட அமைப்பாளர் வீரமணி, பூங்காவனம், அருண், நீலகண்டன்,

S.ராஜேஷ் ராமு,சதீஷ், ராஜேஷ்,பங்கஜம் உள்ளிட்ட இயக்கத்தின் முன்னோடிகள் உடனிருந்தனர்.

டெமலோஸ் சாலையில் உள்ள மழை நீர் கால்வாயை (2/12/2025) தினம் அதிகாரிகளுடன் சென்று பார்த்தோம்.

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண்:71மேட்டுப்பாளையம் பகுதிக்கு (2/12/2025) தினம் இரவு உதவி செயற்பொறியாளர் ஜெயராமன் அவர்களுடன் சென்று மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திரு.வி.க.நகர் தொகுதி வார்டு எண்:71

அருந்ததியர் நகர் பகுதிக்கு (2/12/2025) தினம் இரவு உதவி செயற்பொறியாளர் ஜெயராமன் அவர்களுடன் சென்றோம்.

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண்:71 கணேசபுரம் மேம்பால பணிகள் நடைபெற்று வரும் பகுதியில் தேங்கி நின்ற மழைநீரை வெளியேற்றும் பணியினை (2/12/2025) தினம் பார்வையிட்டோம்.மாநகராட்சி துணை ஆணையர்கள் திரு.கௌசிக்,திரு.கட்டாரவி, எம்.சரவணன், எம்.சி., உஉதவி செயற்பொறியாளர் ஜெயராமன் உள்ளிட்டோர் இருந்தனர்.

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண்:71 பெரம்பூர் சுரங்கப்பாதை பகுதியில் மழைநீரை வெளியேற்றும் மோட்டார் ரூமை (2/12/2025) தினம் தொடர்புடைய அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார்.

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண்:75 எஸ்.எஸ்.புரம் “பி”-பிளாக் பகுதியில் தேங்கியிருக்கும் மழைநீரை வெளியேற்றுவதற்கான மேற்கொள்ள (2/12/2025) தினம் தொடர்புடைய அதிகாரிகளுடன் சென்றனர்.

அதைப்போலவே பெரம்பூர் பேருந்து நிலையத்தில் சூழ்ந்திருந்த மழைநீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டார்.

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண்:76 கே.எம்.கார்டன் பகுதியில் தேங்கியிருக்கும் மழைநீரை வெளியேற்றுவதற்காக “ஜெய் நகரில்” இயக்கப்பட்ட மோட்டார்களை (2/12/2025) தினம் தொடர்புடைய அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார்.

**மழையில் பரிதவித்த மூதாட்டி!**

திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, 76-வது வட்டம் அங்காளம்மன் கோவில் தெருவில் இரண்டு நாட்களாக தொடர்ந்து பெய்த கனமழைக்கு நேற்று இரவு முதல் மழை நீர் சூழ்ந்திருந்த பகுதியில் ஒரு ஆட்டோவில் தஞ்சம் புகுந்து அதிலிருந்து வெளியேற வழியில்லாமல் சிக்கி பரிதவித்த மூதாட்டியின் அபயக்குரல் கேட்டு அந்த மூதாட்டியை என்னுடன் மழை நீர் தொடர்பான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கழகத்தோழர்களின் உதவியுடன் அந்த மூதாட்டியை நீர் சூழ்ந்த பகுதியில் சிக்கி நின்று கொண்டிருந்த ஆட்டோவில் இருந்து மீட்டு அருகிலிருந்த மாநகராட்சி பள்ளியில் தங்க வைத்து அந்த மூதாட்டிக்கு தேவையான படுக்கை, பாய் மற்றும் தலையனை மற்றும் உணவளித்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பாடியநல்லூர் ஊராட்சி கிளை கழக சார்பில் செங்குன்றம் கூட்டுச்சாலை அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் ஏழை எளிய மக்களுக்கு மதியம் பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் ஒன்றிய நிர்வாகிகள் சே.அரசு, பா.சேகர். நா.பரசுராமன். என்.பரந்தாமன். துளசி ராஜேந்திரன். என்.வி.சரவணன்,மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை லையன். ஜி.பாலாஜி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்

# வடகிழக்குப் பருவமழை நடவடிக்கைகள் விவரம்!

புதுடெல்லி, டிச. 4-

மழையின் அளவு 17.10.2025 அன்று காலை 8.30 மணி முதல் நேற்று (03.12.2025) காலை 8.30 மணி வரை சராசரியாக 546.05 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

நேற்று 02.12.2025 காலை 5.30 மணி முதல் நேற்று (03.12.2025) காலை 5.30 மணி வரை சராசரியாக 61.70 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக எண்ணூர் பகுதியில் 135.30 மி.மீட்டர் மழைப் பொழிவும் (திருவொற்றியூர் மண்டலம்), குறைந்தபட்சமாக முகலிவாக்கம் பகுதியில் 20 மி.மீட்டர் மழையும் (ஆலந்தூர் மண்டலம்) பெய்துள்ளது.

நேற்று (03.12.2025) காலை 6 மணி முதல் 12 மணி வரை சராசரியாக 15.18 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக எண்ணூர் பகுதியில் 108.60 மி.மீட்டர் மழைப் பொழிவும் (திருவொற்றியூர் மண்டலம்), குறைந்தபட்சமாக ஐஸ் ஹவுஸ் பகுதியில் 1.80 மி.மீட்டர் மழையும் (தேனாம்பேட்டை மண்டலம்) பெய்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளன.

நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 111 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

22.10.2025 முதல் 30.10.2025 வரை மொத்தம் 5,98,200 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

டிட்வா புயல் மழையின் காரணமாக 30.11.2025 முதல் நேற்று (02.12.2025) வரை 11,24,350 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று (03.11.2025) 2,74,600 நபர்களுக்கு காலை உணவும், 3,51,300 நபர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

பொதுமக்களுக்கு நோய்த்தொற்று பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், 17.10.2025 அன்று முதல் 02.12.2025 அன்று வரை 2,954 நிலையான மற்றும் நடமாடும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 1,20,998 நபர்கள் பயனடைந்துள்ளனர். நேற்று (03.12.2025) 103 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு நிவாரண மையங்களில் தங்க வைப்பதற்காக 107 படகுகள் தயார்நிலையில் உள்ளது. இதில்

36 படகுகள் மாநகராட்சிக்கு சொந்தமாக வாங்கி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப் படையை (NDRF) சார்ந்த 300 நபர்கள், மாநில பேரிடர் மீட்புப் படையை (SDRF) சார்ந்த 50 நபர்கள் தயார்நிலையில் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் 170 எண்ணிக்கையில் 100Hp மோட்டார் பம்புகள், 550 டிராக்டர்களில் பொருத்தப்பட்ட பம்புகள் உள்ளிட்ட பல்வேறு திறன் கொண்ட 1,496 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

2 ஆம்பிபியன், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர்கள், பல்வகை பயன்பாட்டிற்கான

6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினி ஆம்பிபியன், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள்,

15 மரக்கிளை அகற்றும் சக்திமான் வாகனங்கள், உட்பட மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள் 15, ஹைட்ராலிக் ஏணி 2, கையடக்க மர அறுவை அறுப்பான் 224, டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் 216 என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்கள் தயார்நிலையில் உள்ளன.

29.11.2025 அன்று முதல் 03.12.2025 இன்று வரை மழையின் காரணமாக விழுந்த

64 மரங்களும் அகற்றப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர்த் தேக்கம் இன்றி போக்குவரத்து சீராக உள்ளது.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள், வண்டல் மண் சேகரிப்புத் தொட்டிகள் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

24 மணிநேரமும் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் பொதுமக்களிடமிருந்து 150 இணைப்புகளுடன் கூடிய 1913 என்ற உதவி எண்ணிற்கு வரும் புகார்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வரும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கண்காணிப்பு

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் நபர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

புயல் மற்றும் மழையின் போது முதியோர் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கும் வகையில் ஆவின் பால் பவுடர் 1 இலட்சம் பாக்கெட்டுகளும், 5 கிலோ அரிசி,

1 கிலோ பருப்பு மற்றும் 1 லிட்டர் பாமாயில் அடங்கிய தொகுப்பு 1 இலட்சம் எண்ணிக்கையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சியில் அன்னை இந்திரா நகர் கிளையில் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் அ. விநாயகமூர்த்தி தலைமையில் கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி அறுசுவை உணவு பிரியாணி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பி.எஸ்.ரமேஷ், சுனில் மேத்யூ, ஏ.முருகன், வி.ஆர். குமார், சுகுமார், சி.இளஞ்செழியன், மாஸ்டர் விஜய், எஸ்.கார்த்திக், புனிதா ராஜா, ரஞ்சித் சிங், வெங்கடாஜலூ, தனசேகரன், சாலமன், கலைச்செல்வன், மாயஜோதி, ஜானகி, ருக்மணி, சுரேஷ், சங்கர், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.